## ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க. – துணை போகும் அ.தி.மு.க.வை கண்டித்து

# கடலூர் கிழக்கு மாவட்டத்தில் மாநகரம், ஒன்றியங்கள், நகரம், பேரூர் பகுதிகளில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்ட செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்தும், அதற்கு துணை போகும் அதிமுக-வையும் கண்டித்து கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் அனைத்து கழக ஒன்றியங்களிலும் மற்றும், மாநகரம், நகரம், பேரூர் பகுதிகளிலும், இன்று (12.02.2026-வியாழக்கிழமை) மாலை 04.00 மணியளவில், மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட வேண்டும், என்ற தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக கடலூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கழக மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் கீழ்க்கண்ட பட்டியலில் உள்ளவாறு நடைபெறு உள்ளது. அதுசமயம் ஆர்ப்பாட்டத்தில் சம்பந்தப்பட்ட இடங்களில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த தி.மு.க. மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் கிளை, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், மாவட்ட, மாநரக, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), கழக தோழர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளில் நிர்வாகிகள் மற்றும் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக அவரவர் பகுதிகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

| வ. எண் | கழக மாநகரம்/ ஒன்றியம்/ நகரம்/ பேரூர் | ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| 1 | காட்டுமன்னார்கோயில் மேற்கு ஒன்றியம், காட்டுமன்னார்கோயில் பேரூர் | பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையம் அருகில், காட்டுமன்னார்கோயில் |
| 2 | காட்டுமன்னார்கோயில் கிழக்கு ஒன்றியம் | கடைவீதி, மோவூர் |
| 3 | திருமுட்டம் கிழக்கு ஒன்றியம், | கடைவீதி, சோழதரம் |
| 4 | திருமுட்டம் பேரூர் | பழைய காவல் நிலையம் அருகில், திருமுட்டம் |
| 5 | திருமுட்டம் மேற்கு ஒன்றியம் | பேருந்துநிலையம் அருகில், நாச்சியார்பேட்டை |
| 6 | குமராட்சி தெற்கு ஒன்றியம் | அண்ணா சிலை அருகில், திருநாறையூர் |
| 7 | குமராட்சி வடக்கு ஒன்றியம் | எம்.ஆர்.கே திடல், நெடும்பூர் |
| 8 | குமராட்சி மேற்கு ஒன்றியம் | ரைஸ்மில் எதிரில், வடக்கு மாங்குடி |
| 9 | லால்பேட்டை பேரூர் | புதுபஜார், லால்பேட்டை |
| 10 | குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம், குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றியம், வடலூர் நகரம் , குறிஞ்சிப்பாடி பேரூர் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதில், குறிஞ்சிப்பாடி |
| 11 | கடலூர் கிழக்கு ஒன்றியம் | பேருந்துநிலையம் அருகில்,சேடப்பாளையம் |
| 12 | கடலூர் மேற்கு ஒன்றியம் | மந்தைவெளி திடல், நடுவீரப்பட்டு |
| 13 | சிதம்பரம் நகரம் | மேல வீதி, பெரியார் சிலை, கஞ்சித்தொட்டிமுனை, சிதம்பரம் |
| 14 | பரங்கிப்பேட்டை வடக்கு ஒன்றியம் | முக்கூடல் சந்திப்பு, பி.முட்லூர் |
| 15 | பரங்கிப்பேட்டை பேரூர் | கடைவீதி, பரங்கிப்பேட்டை |
| 16 | பரங்கிப்பேட்டை தெற்கு ஒன்றியம் | பேருந்துநிலையம், மேலச்சாவடி |
| 17 | கிள்ளை பேரூர் | கடைவீதி, கிள்ளை |
| 18 | பரங்கிப்பேட்டை மேற்கு ஒன்றியம் | பெரியார் பேருந்து டெப்பே, லால்புரம் |
| 19 | அண்ணாமலை நகர் பேரூர் | மொழிப்போர் தியாகி, இராஜேந்திரன் சிலை அருகில் |
| 20 | குமராட்சி கிழக்கு ஒன்றியம் | ஓமக்குளம் அருகில், சி.தண்டேஸ்வரநல்லூர் |
| 21 | குமராட்சி மத்தி ஒன்றியம் | தியேட்டர் அருகில், வல்லம்படுகை |
| 22 | கம்மாபுரம் தெற்கு ஒன்றியம். | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில், கம்மாபுரம் |
| 23 | கெங்கைகொண்டான் பேரூர் | நான்கு முனை சந்திப்பு, நெய்வேலி–2 |
| 24 | கம்மாபுரம் வடக்கு ஒன்றியம் | பேருந்துநிலையம், மந்தாரகுப்பம் |
| 25 | கம்மாபுரம் மத்திய ஒன்றியம் | பேருந்து நிலையம் அருகில், அரசக்குழி |
| 26 | திருமுட்டம் வடக்கு ஒன்றியம் | துணை மின் நிலை எதிரில், மேலபாலையூர் |
| 27 | புவனகிரி கிழக்கு ஒன்றியம் | ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில், அழிச்சிக்குடி |
| 28 | புவனகிரி மேற்கு ஒன்றியம் | பேருந்துநிலையம் அருகில், அம்மன்குப்பம் |
| 29 | புவனகிரி மத்திய ஒன்றியம் | கடைவீதி, பு.கொளக்குடி |
| 30 | புவனகிரி பேரூர் | அண்ணாசிலை அருகில், புவனகிரி |
| 31 | சேத்தியாதோப்பு பேரூர் | ராஜீவ் காந்தி சிலை அருகில், சேத்தியாதோப்பு |
| 32 | கீரப்பாளையம் கிழக்கு ஒன்றியம் | அண்ணா சிலை அருகில், கீரப்பாளையம் |
| 33 | கீரப்பாளையம் மேற்கு ஒன்றியம் | ஓம்சக்திகோயில் எதிரில், அள்ளூர் |
| 34 | கீரப்பாளையம் மத்திய ஒன்றியம் | கடைவீதி, டி.நெடுஞ்சேரி |
| 35 | கடலூர் மாநகரம் | தலைமை தபால் நிலையம் அருகில், மஞ்சக்குப்பம், கடலூர் |
| 36 | கடலூர் வடக்கு ஒன்றியம் | பேருந்து நிலையம் அருகில், தூக்கணாம்பாக்கம் |
| 37 | கடலூர் தெற்கு ஒன்றியம் | கடை வீதி, வரக்கால்பட்டு |
| 38 | கடலூர் மத்திய ஒன்றியம் | பேருந்துநிலையம் அருகில், ரெட்டிச்சாவடி |

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர் – கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

## புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டங்கள்!



### மாவட்ட செயலாளர் – கே.கே.செல்லப்பாண்டியன் அறிவிப்பு!

**நாள் : 12.02.2026 - நேரம்: மாலை 4 மணி**

| வ. எண். | மாநகரம் / ஒன்றியம்/பேரூர் | ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம் | கண்டன உரை |
|---|---|---|---|
| 1. | புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாநகரம் | புதுக்கோட்டை | **K.K.செல்லபாண்டியன்**, M.Com,B.L., (மாவட்ட கழக செயலாளர்) **M.லியாகத் அலி** (வடக்கு மாநகர பொறுப்பாளர்) **வே.ராஜேஷ்** (தெற்கு மாநகர பொறுப்பாளர்) |
| 2. | புதுக்கோட்டை தெற்கு ஒன்றியம் | மாலையீடு | **அரு.வீரமணி** (மாவட்ட அவை தலைவர்) **மு.க.இராமகிருஷ்ணன்** (ஒன்றிய செயலாளர்) |
| 3. | புதுக்கோட்டை வடக்கு ஒன்றியம் | பெருங்களூர் கடைவீதி | **Dr.வை.முத்துராஜா** (சட்டமன்ற உறுப்பினர்) **R.சாமிநாதன்** (ஒன்றிய செயலாளர்) |
| 4. | குன்றாண்டார்கோவில் கிழக்கு | கிள்ளுக்கோட்டை | **N.சேட்டு** (ஒன்றிய செயலாளர்) **கீரை.அசரப் அலி** (தலைமை கழக பேச்சாளர்) |
| 5. | குன்றாண்டார்கோவில் மேற்கு & கீரனூர் பேரூர் | கீரனூர் | **கவிச்சுடர் கவிதை பித்தன்** Ex.MLA (கழக இலக்கிய அணி துணை தலைவர்) **OS.வெங்கடாசலம்** (ஒன்றிய செயலாளர்) **P.அண்ணாத்துரை** (பேரூர் செயலாளர்) |
| 6. | குன்றாண்டார்கோவில் மத்தியம் | குன்றாண்டார் கோவில் | **குளவாய்ப்பட்டி C.சண்முகம்** (ஒன்றிய செயலாளர்) **Dr.C.குறிஞ்சிவானன்** (தொகுதி பொறுப்பாளர்) **த.செல்வம்** (மாவட்ட கவுன்சிலர்) |
| 7. | விராலிமலை கிழக்கு | ஆவூர் 4–ரோடு | **செ.அசோக்பாண்டியன்** (கழக வர்த்தக அணி துணை செயலாளர்) **மு.பி.ம.சத்தியசீலன்** (ஒன்றிய செயலாளர்) |
| 8. | விராலிமலை மேற்கு | விராலிமலை | **த.சந்திரசேகரன்** (கழக விவசாய தொழிலாரணி துணை தலைவர்) **அ.இளங்குமரன்** (ஒன்றிய செயலாளர்) |
| 9. | விராலிமலை மத்தியம் | வேலூர் ரோடு சமத்துவபுரம் | **KRN.போஸ்** (கழக தொழிலாளரணி துணை செயலாளர்) **K.P.அய்யப்பன்** (ஒன்றிய செயலாளர்) |
| 10. | கறம்பக்குடி தெற்கு ஒன்றியம் | வெட்டன்விடுதி | **கார்த்திக் தொண்டைமான்** Ex.MLA **தவ.பாஞ்சாலன்** (ஒன்றிய செயலாளர்) |
| 11. | கறம்பக்குடி வடக்கு, பேரூர் | கறம்பக்குடி | **சுப.சரவணன்** (தலைமை செயற்குழு உறுப்பினர்) **வெ.முத்துக்கிருஷ்ணன்** (ஒன்றிய செயலாளர்) **உ.முருகேசன்** (பேரூர் செயலாளர்) |
| 12. | கந்தர்வகோட்டை வடக்கு ஒன்றியம் | தச்சங்குறிச்சி | **க.மதியழகன்** (மாவட்ட துணை செயலாளர்) **மா.தமிழ்அய்யா** (ஒன்றிய செயலாளர்) **R.செல்லத்துரை** (பொதுக்குழு உறுப்பினர்) |
| 13. | கந்தர்வகோட்டை தெற்கு ஒன்றயம் | கந்தர்வகோட்டை | **SS.கருப்பையா** (மாவட்ட துணை செயலாளர்) **M.பரமசிவம்** (ஒன்றிய செயலாளர்) |
| 14. | அன்னவாசல் கிழக்கு | குடுமியான்மலை | **பெ.ராஜேஸ்வரி** (மாவட்ட துணை செயலாளர்) **M.கோவிந்தராஜ்** (ஒன்றிய செயலாளர்) |
| 15. | அன்னவாசல் மேற்கு இலுப்பூர் பேரூர் | இலுப்பூர் | **சு.சண்முகம்** (தலைமை செயற்குழு உறுப்பினர்) **தென்னலூர் பழனியப்பன்** (ஒன்றிய செயலாளர்) **வை.விஜயகுமார்** (பேரூர் செயலாளர்) |
| 16. | அன்னவாசல் தெற்கு, பேரூர் | அன்னவாசல் | **K.S.சந்திரன்** (ஒன்றிய செயலாளர்) **MSA.முகமது ரிஷா** (பேரூர் செயலாளர்) **ராப்பூசல் M.செந்தில்குமார்** (பொதுகுழு உறுப்பினர்) **சொ.தமிழினியன்** (தலைமை கழக பேச்சாளர்) |
| 17. | அன்னவாசல் வடக்கு | காவேரிநகர் / விளத்துபட்டி | **கீரை. தமிழ்ராஜா** (தலைமை செயற்குழு உறுப்பினர்) **RRS.மாரிமுத்து** (ஒன்றிய செயலாளர்) வழக்கறிஞர் **பூங்குடி M.சிவா** |

கண்டன ஆர்பாட்டங்களை மாநகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் அந்தந்த ஒன்றியங்களுக்கு உட்பட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் அந்த அந்த மாநகர, ஒன்றிய, பேரூர் கழகத்திற்கு உட்பட்ட அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தை வெற்றி பெற செய்ய வேண்டுகிறேன்.

**கே.கே.செல்லப்பாண்டியன்**
செயலாளர் – புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க.

## ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க. வையும் துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து,

# பெரம்பலூர் மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் 4 இடங்களில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

### மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர்,பிப்,12

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும், அதற்கு ஒத்து ஊதி துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில், இன்று (பிப்ரவரி 12 - வியாழக்கிழமை) பெரம்பலூர் மாவட்டத்தில் 4 இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு, மேனாள் ஒன்றிய அமைச்சர் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., வழிகாட்டுதல் படி, போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கிணங்க, ஒன்றிய பா.ஜ.க. அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கான கல்வி நிதி ரூ.3458 கோடி,

நூறு நாள் வேலை திட்ட நிதி ரூ.2000 கோடி, குடிநீர் இணைப்பு திட்ட நிதி ரூ.3112 கோடி உள்ளிட்ட எந்த நிதியையும் விடுவிக்காமலும், வளர்ச்சி திட்டத்திற்கு ஒரு பைசா கூட ஒதுக்காமலும், தமிழ்நாட்டு மக்களை புறக்கணித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு. தமிழ்நாட்டிற்கான நிதியும் இல்லை, வளர்ச்சி திட்டமும் இல்லை என ஒன்றிய அரசு கை விரித்த போதும் அவர்



களது காலில் விழுந்து ஆதரித்துள்ளது அ.தி.மு.க.

நிதி மறுப்பு ஒரு புறம் என்றால் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு சட்டத்தை சிதைத்து, நூறு நாள் வேலையையே இனி இல்லாமல் செய்து கிராம மக்களின் வாழ்வாதாரத்தை அளிக்கும் சட்டத்தை திரும்ப பெறவோ, அதற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்கவோ செய்யாமல் ஏழை எளிய மக்களின் வயிற்றில் அடித்துள்ளது ஒன்றே பா.ஜ.க. அரசு, அதோடு அமெரிக்காவின் விவசாயம் சார்ந்த பொருட்களை இங்கே இறக்குமதி செய்து விற்க ஒப்புக்கொண்டு நமது விவசாயிகளின் வாழ்வையே கேள்விக்குறியாக்கியுள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

ஒரே நேரத்தில் நூறு நாள் வேலை ஒழிப்பு சட்டம், விவசாயத்தை அழிக்கும் ஒப்பந்தம் என கிராமப்புற மக்கள் மீது இரட்டை அணுகுண்டு தாக்குதல் நடத்தி உள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இதற்கு உறுதுணையாக இருந்து துரோகம் செய்து வருகிறது அ.தி.மு.க.

நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம், புதுப்புது சட்டங்கள், ஒப்பந்தங்கள் வழியே மக்களை வஞ்சிப்பது, நம் வளர்ச்சியைத்தடுத்து வீழ்ச்சியில் தள்ள துடிப்பது என அநீதி இளைத்து வரும் ஒன்றிய பா.ஜ.க. வை எதிர்த்தும், அதோடு கூட்டு சேர்ந்து டப்பா எஞ்சின் மூலம் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களையும் டெல்லியின் அடிமையாக்கத் துடிக்கும் அடிமை அ.தி.மு.க. வைக் கண்டித்தும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில், பெரம்பலூர் பழைய பேருந்து நிலையம், காந்தி சிலை அருகில், பெரம்பலூர் ஒன்றிய கழக செயலாளர் ம.இராஜ்குமார் தலைமையில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன்(நான்), பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர்

எம். பிரபாகரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறோம். ஆலத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் என்.கிருஷ்ணமூர்த்தி, ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன் தலைமையிலும், வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் செ.நல்லதம்பி, வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ந.ஜெகதீஷ்வரன் தலைமையிலும், வேப்பூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு வேப்பூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் தி.மதியழகன், வேப்பூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் சி. ராஜேந்திரன், வேப்பூர் கிழக்கு ஒன்றி கழக பொறுப்பாளர் அழகு. நீலமேகம் ஆகியோரது தலைமையிலும், பெரம்பலூர் மாவட்டத்தில் 4 இடங்களில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், இந்திய தேசிய காங்கிரஸ்,ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள் கட்சி, இடது கம்யூனிஸ்ட், வலது கம்யூனிஸ்ட் உள்ளிட்ட அனைத்து தோழமைக் கட்சி நிர்வாகி கள்,மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர,பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை,வார்டு கழகச் செயலாளர்கள், கழகத் தோழர்கள், தோழமைக் கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பெரம்பலூர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.